**ஒபெக் நிதியத்தின் கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம் - 2020**

---

ஒபெக் நிதியத்தின் கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நாரஹம்பிட்டிய – நுகெகொட வீதியின் மீள் நிர்மானம் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,347.37 மில்லியனுக்குச் சமமான 94.99 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 6,499.57 மில்லியனுக்குச் சமமான 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதியினால் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றக்களிலுள்ள கடன் மீதிக்கும் வெளி வளங்கள் திணைக்கள அறிக்கைகளிற்கும் இடையே மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 248 | மீதித் தொகை ரூபா 247,901,338.53 2020 ஆம் ஆண்டிற்கான பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாக கணக்கிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு காலப்பகுதி முடிவில் சரியான கடன் மீதியை காட்ட உண்மையான மீளப்பெறல்களை பதிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறு காணி உரிமையாளர்களிற்கு சட்டரீதியான இழப்பீடுகளை கொடுப்பதில் தாமதத்தின் மீதான வட்டி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 185 | அது பிலியந்தல—மஹரகம வீதிக்காக ரூபா 34,613,956.13 உம் வலகம—தியகம வீதிக்காக ரூபா 13,451,417.35 உம் வட்டி ஏற்பாடாக நாற்குறிப்பு பற்றுச்சீட்டு இல.80 இல் கணக்கிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டு காலப்பகுதி இறுதியில் இழப்பீடு கொடுப்பனவில் தாமதத்தின் மீதான செலுத்த வேண்டிய வட்டி சரியாக பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் மாதத்திற்கான ஒப்பந்ததாரரின் 4 இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களுடன் தொடர்புபட்ட ஏற்பாடு மீயாய்வாண்டில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 11.63 | 2020 திசெம்பரிற்கான சொல்லப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னரே பீஎம்யூவிற்கு மேற்கூறிய ஐபீசீ இற்காக செய்யப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல 08 உடன் உடன்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி செயலாற்றல்

| விடயங்கள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர் பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| கொட்டாவ – தலகல வீதி | 100% | 70% | வீதி நிர்மான வேலைகளின் செயலாற்றல் இலக்குகளிற்கு பின்னால் | செயற்திட்டமானது காணி சுவீகரிப்பு விடயங்கள் மற்றும் ஒப்பந்ததாரரின் மந்தகதியயான |
| கோட்டே – போப்பே வீதி | 100% | 99% | | |
| ஒருகொடவத்த – அம்பத்தல வீதி (கட்டம் I) | 100% | 48% | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஒருகொடவத்த – அம்பத்தல வீதி (கட்டம் II) | 61% | 38% | காணப்பட்டது. இது செயற்திட்டத்தினை தாமதப்படுத்துவதுடன் செயற்திட்ட கிரயத்தனையுயம் அதிகரிக்கும். | செயலாற்றல் காரணமாக தாமதமடைகின்றது. |

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** உடன்பட்டனர்.

**கணக்காய்வாளர் பரிந்துரைகள்** இலக்கிடப்பட்ட திகதிகளில் வேலைகளை பூர்த்தி செய்ய நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு கொடவத்தை – அம்பத்தல வீதியின் முதல் கட்டத்தின் மீதான புனரமைப்பு வேலை 2017 ஜூலை 1 இல் ஆரம்பித்திருந்ததுடன் 478 நாட்கள் காலநீடிப்பு தாமத கட்டணங்கள் அறவிடப்படாமல் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 175 நாட்கள் கால நீடிப்பிற்காக ரூபா 17.41 மில்லியன் தொகையான இழப்பீடு ஒப்பந்ததாரரரின் செயலாற்றலை கருத்தில் கொள்ளாது அனுமதிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் தாமதக்கட்டணங்களை அறவிட ஒப்பந்ததாரரின் செயலாற்றலினை நேரஅடிப்படையில் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட தகவல்களின் பிரகாரம், ஒப்பந்த காலம் கொட்டாவ – தலகல வீதி மற்றும் கோட்டே – போப்பே வீதியின் நிர்மானத்தில் தாமதம் காரணமாக 550 நாட்கள் மற்றும் 661 நாட்களினால் நீடிக்கப்பட்டிருந்தது. ரூபா 59.25 மில்லியன் மற்றும் ரூபா 72.18 மில்லியன் தாமதகாலத்தின் மீதான இழப்பீட்டிற்காக அனுமதிக்கப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். | ஒப்பந்தத்தின் தேவையற்ற கிரயங்களை குறைக்க நிர்மான வேலைகள் முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |
| (இ) | காப்புறுதி கொள்கைகளின் செல்லுபடியாகும் காலம் 2020 திசெம்பர் 31 இல் காலாவதியடைகின்றது. இருப்பினும், நிர்மான காலப்பகுதியில் ஏற்படும் இடர்களை பாதுகாக்க காப்புறுதி கொள்கையின் காலப்பகுதியினை நீடிக்க ஒப்பந்ததாரரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 34 பொதுமக்கள் முறைப்பாடுகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாமல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | செயற்திட்டத்தின் கட்டுமான வேலைகளை பூர்த்திசெய்வதற்கு முன்னர் அனைத்து பொதுமக்கள் முறைப்பாடுகளையும் பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்பட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 911 அரச காணிகள் உள்ளடங்களாக 5,493 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இழப்பீடுகளை கொடுத்து தீர்ப்பதில் தாமதம் காரணமாக ரூபா 1,175 மில்லியன் வட்டி உள்ளடங்களாக ரூபா 9,656 மில்லியன் தொகையான இழப்பீடு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக காணி கொள்வனவு நடவடிக்கைகளிற்காக செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் 05 காணித்துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன. மேலும், மொத்தமாக ரூபா 1,178 மில்லியன் இழப்பீட்டு பட்டியல்கள் செயற்திட்டத்தின் பற்றாக்குறையான நிதிவசதிகளின் காரணமாக செயற்திட்டத்தின் கையில் காணப்பட்டன. | கொள்வனவு செய்யப்பட்ட காணிகளின் எண்ணிக்கை விபரங்கள் தவிர வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் சரி. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் காணிகளை காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |